நிக்கவெரட்டி பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிக்கவெரட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிக்கவெரட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுடன் இணங்காமை

உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு விசாரணையில் காணப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை	பலுக்கஸ் சந்தி கிரிகளி காணி தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்படுவதுடன் அந்தக் காணி தொடர்பாக பிரதேச செயலாளர் தீர்மானம் வழங்கும் வரை வழக்கு விசாரணை நடாத்திச் செல்லப்படுகின்றது.	நிறுவனத்திற்கு எதிராக தொடரப்படுகின்ற வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப் படாதிருந்த ரூபா 712,800 கூட்டுத்தொகையான 06 சொத்து விடயங்கள் நிதனிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கன.	2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல சொத்துக்களும் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய இருப்பில் உள்ளடக்கப்பட்ட சோடியம் பல்ப்களின் பெறுமதி ரூபா 97,500 ஆக இருந்த போதும் அது 9,750 ஆக ரூபா 87,750 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	தகவல்கள் வழங்கும் போது ரூபா 97,500 ஆன தொகை 9,750 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இந்த வழுக்கள் 2025 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	களஞ்சிய இருப்பின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேணடும்.

(இ)	முன்னைய ஆண்டின் இறுதி கடன் கொடுத்தோர் மீதியில் உள்ளக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் தீர்த்துவைக்கப்படாத ரூபா 205,000 மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதிக் கடன்கொடுத்தோர் மீதியில் கைவிடப்பட்டிருந்தது.	சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன் கொடுத்தோர் மீதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பதிவேடுகள், பட்டோலைகள் அல்லது மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 3,129,626 ஆன இருப்பு பெறுமதிகளை திருப்திகரமாக சான்றுறுதிப் படுத்த முடியாதிருந்தது.	பதிவேடுகளுக்கு எடுத்து எதிர் காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமை	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்			
	85 (அ) பிரிவு	சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள சகல வீடுகள், கட்டிடங்கள் மற்றும் காணிகளுக்கான போதியளவான மலசல கூட வசதிகள் வழங்கப்படுகின்ற மையை உறுதிப்படுத்துதல் சபையின் பணியாக இருந்த போதிலும் அது தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	எங்களால் உரிய ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் அளவினைக் கவனத்திற்கொண்டு குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் அங்கத்தவர்களுக்காக மாத்திரம் மலசல கூட உதவி வழங்குதல் மேற் கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதியமாக சபைக்குரிய பொது மலசலகூட முறைமையைப் பராமரித்தலும் மேற்கொள்ளப்படுகின்றது.	சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மக்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக நடவக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி			
i	61 ஆம் விதி	வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு பட்டியலில் உள்ளடக்கப்பட்ட சகல வேலைகளினதும் வரி தொடர்பாக பதிவேட்டில் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் கட்டணம் செலுத்துகின்ற	மெய்மையாய்வு நடவடிக்கை களில் ஏற்பட்ட தாமதத்தினால் மெய்மை ஆய்வு பட்டியலின் முறையில் அறவிடல் பதிவேடுகளுக்கு கொண்டுவர முடியாதிருந்த போதிலும் 2025 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

		செயற்திட்டம் மாத்திரம் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருந்தது.		
ii	விதி 218	காணி கட்டிடங்களை உள்ளடக்கிய நிலையான சொத்து மெய்மை ஆய்வு வருடாந்தம் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் மேற்கொள்ளப்படும்.	பிரதேச சபை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 571	பெறுமதி ரூபா 641,031 ஆன 02 வருடங்களை விஞ்சிய 03 நானாவித வைப்புக்கள் மற்றும் 38 கேள்வி வைப்புக்களை ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை.	நானாவித வைப்புக்கள் தொடர்பாக மேலும் கண்டறிந்து உறுதிப்படுத்தி விண்ணப்பதாரர் கள் முன்வராதிருப்பார்களாயின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் கேள்வி வைப்புக்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலம் உரிய நபர்களுக்கு அறிவித்து அது தொடர்பாக அதன் பதிலின் பிரகாரம் அவர்கள் கோரிக்கை விடாதிருப்பார்களாயின் அந்தத் தொகையை அரசாங்க வருமானத்திற்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,930,520 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,981,284 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 வருமான சேகரிகத்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	**வீதவரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆதனவரி மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 3,036,452 மற்றும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட ரூபா 1,626,069 அறவிடப்படாமல் காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் போது வருமானம் வாராந்தம் மற்றும் ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அறவிடுவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சபைக்குரிய ஆதனவரி ஆதனங்கள் 2,047 இல் ஆதன உரிமையாளர்களின் பெயர் ‘‘உரிமையாளர்’’ ஆக குறிப்பிடப்பட்ட	2025 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்படுகின்ற மதிப்பீட்டின் மூலம் உரிமை யாளர்களை உறுதிப்படுத்தி	ஆதன உரிமையாளர்களை இனங்கண்டு ஆதன வரியைச் சேகரிப்பதற்கு

ஆதனங்கள் 32 காணப்பட்டது. ஆதன வரி ஆதனங்கள் உரித்து உரியவாறு இனங்காண முடியாமையினால் சபைக்கு அறவிட வேண்டிய ஆதனவரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) வாடகை மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,504,628 ஆன நிலுவை வாடகை மற்றும் வாடகை ரூபா 395,595 அறவிட வேண்டிய காணப்பட்டது.	நிலுவை வாடகை செலுத்தாத வர்களுக்காக நடுவர் சபைகளுக்கு அனுப்பப்பட்டுள் ளதுடன் அதில் மூன்று பேருக்கு எதிராக நிக்கவரெட்டிய மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடர்வ தற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படு கின்றது.	நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்று வதற்கான உப விதிகள் விதிக்க வேண்டி யிருந்த போதிலும் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு வரையில் 10 உப விதிகள் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டிருந்தது.	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக உப விதிகளை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) சபைக்குரியதாக காணப்பட்ட நிக்கவெரட்டி சுகாதார மற்றும் பொது வசதிகள் நிலையத்தில் 06 கடைகள் 08 வருட காலம் முதல் வருமானம் உழைப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை.	மூடிவைக்கப்பட்டுள்ள கடைக் கொள்வனவாளர்களினால் முன்வருவார்களாயின் மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சபைக்குரிய ஆதனங்களை வருமானம் உழைப்பதற்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.
(ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 1,070,820 செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பினை உறுதிப்படுத்தி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியில் ரூபா 381,785 ஆன கடைகளின் வைப்பு பணத்தை அந்தக் கடைகளின் வாடகை உரித்து காணப்படுகின்றவரை வைப்புத் தொகையாக வைக்க வேண்டி யிருந்தமையால் இந்தப்	இருப்பினை பரீட்சித்து செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		பணத்தை வருமானத்திற்கு எடுக்க முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியில் ரூபா 697,035.46 தொகை கடன் கொடுத்தோர் மீதியில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	ஆதனவரி மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து மதிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் பிரதேச சபையினால் வாடகை வரி மதிப்பீடு இறுதித் தடவையாக 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மதிப்பீடு உரிய கால எல்லையில் மேற்கொள்ளாமையின் காரணமாக ஆதனங்களின் தற்போதைய நிலைமை மாற்றமடைந்ததன் அடிப்படையில் கணிப்பிட முடியாத வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.	2025 இன் ஆதனவரி ஆதனங்கள் தொடர்பாக புதிய மதிப்பீட்டை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த யானை வேலி செயலிழந்த நிலைமையில் காணப்பட்டதன் காரணமாக நிலையத்தின் ஊழியர்களுக்கு யானைகளால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைப் போன்று நிலையத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுப்பொருட்களின் மூலம் யானைகளுக்கு ஏற்படுகின்ற இழப்புக்கள், சேகரிக்கப்படுகின்ற இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றும் போது கதிர்வீச்சுப் பொருட்கள், உலோகப் பொருட்கள் நிலக்கீழ் நீர் மற்றும் மண்ணுடன் சேராத வகையில் ஆகற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.	யானை வேலி அமைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றாடலுக்கு சாதகமாக பாதுகாப்பு முறைமை யொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.
(உ)	சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற கூட்டுப்பசளைகளில் காணப்பட வேண்டிய உள்ளடக்கம் கால ரீதியில் பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட் டதுடன் 2025 சனவரி 25 ஆந் திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த மாதிரி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம்	கூட்டுப் பசளைகளின் தரத்தை அதிகரித்துக் கொள்வதற்கு 2025ஆம் ஆண்டின் தர அறிக்கையில் தரம் தொடர்பாக குறைவான குறிகாட்டிகளை உயர்ந்த நிலையில் கொண்டுவருதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சேதனப் பசளைகளின் தரத் தன்மையை அதிகரித்துக் கொள்வதற்கான திட்ட முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும்.

	கூட்டுப்பசளைகளில் காணப்பட வேண்டியிருந்தமை இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிகாட்டி 9 இல் 6 உம் நிராகரிக்கும் மட்டத்தில் காணப்பட்டது.		
(ஊ)	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் காணப்பட்ட பழைய கலர் இயந்திரம் 2024 மே மாதம் ரூபா 148,700 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருக்கும் போது கூட்டுப்பசளை உற்பத்தி அதிகரிக்கும் நோக்கில் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 729,003 தொகையில் 2024 செப்டெம்பர் மாதத்தின் போது புதிய கலர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந் தது. எனினும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.	பழைய ஹலர் இயந்திரத்தில் தொடர்ச்சியாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகின்றமையால் உரிய பிரகாரம் கேள்விகளுக்கு வழங்க வேண்டி இருந்த மையால் மாகாண குறித்துரைத்த மானியத்தின் கீழ் புதிய கலர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட துடன் அதன் மூலம் தொடர்ச்சியாக நுகர்வோர்களுக்கு கூட்டுப் பசளை விநியோகிப்பதற்கும் முடியுமாக இருந்தது.	சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரித் துக் கொள்வதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கொட்டவெகர கொங்கிறீட் உற்பத்தி நிலையத்தில் கொங்கிறீட் உற்பத்தி மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சேவை வழங்கல் உடன்படிக்கை 2024 யூன் 05 ஆம் திகதியில் முடிவடைந்திருந்ததுடன் அதன் பின்னர் உடன்படிக்கையை நீடிப்பதற்கோ அல்லது புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2024 யூன் 05 ஆந் திகதியின் பின்னர் எந்தவொரு உற்பத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இந்த நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பிரதானமாக மூலப் பொருட்கள் வழங்குவதற்காக வழங்குநர்களைக் கண்டறிவதற்கு பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரித்து அதற்குரிய வழங்குநர்கள் முன்வராமையின் அடிப்படையில் அந்த காலப் பகுதியில் உற்பத்தி நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந் திருந்ததுடன் இந்த ஆண்டில் மீண்டும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வருமானத்தை உழைக் கின்ற செயற்திட்டமாக இருந்தமையால் அதனை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கொங்கிறீட் உற்பத்தி நிலையத்தின் குழாய்க் கிணறு மோட்டார் செயலிழந்து காணப்பட்டமையால் சுற்றாடலில் நீர்த் தேவை மற்றும் உற்பத்திக்கான நீரை வழங்குதல் கஷ்டமாக காணப்படுகின்ற மையும் கொங்கிறீட் உற்பத்தி நிலையம் சுற்றாடலில் சபைக்குரிய நீர் பௌஸர் துருப்பிடித்து காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.	கொங்கிறீட் உற்பத்திக்குத் தேவையான நீரை வழங்குவதற்காக நீர் பௌஸர் இதற்கு முன்னர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பிரதான அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பழுது பார்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	செயலிழந்த சொத்துக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வாகன தளபாடம் மற்றும் பொருத்திகள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க விலலை.	வாகனம் நிலையான சொத்துப் பதிவேடு, தளபாடம் பொருத்திகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் போன்றவை சொத்துப் பதிவேட்டில் முறையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்து பதிவேடு முறையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) சபைக்குரிய காணி மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு அவற்றின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்துகின்ற பிரகாரம் வேலி எல்லை உரிய பிரகாரம் அமைக்காமை மற்றம் சபையினால் பராமரிக்கப்படுகின்ற மயான நிலங்கள் யாவம் பௌதீக ரீதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற பிரகாரம் அளவிடல் மேற்கொண்டு வேலி எல்லை அமைக்கப் பட்டிருக்கவில்லை.	சபைக்குரிய கணிசமான காணி அளவு காணப்படுகின்ற மையினால் கவனத்தில் கூடிய அளவிற்காக வேலி எல்லை பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் மயான நிலங்களுக்காகவும் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் வேலி எல்லை அமைத்து பாதுகாக்கப்பட் டுள்ளது. எதிர்காலத்தில் அவற்றிற்காக வேலி எல்லையை முறையாக அமைப்பதற்கும் பெயர் பதாதைகளைப் பொருத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ) சபைக்குரிய சகல வீதி விளக்குகளின் பாதுகாப்பு, நம்பிக்கை தொடர்பாக ஒவ்வொரு சகல சந்தர்ப்பங்களிலும் அதற்காக பொது மக்கள் பொறுப்பாளராக நியமிக்க வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	பிரதேச செயலகப் பிரிவில் உள்ள ''வீதி விளக்குகளை பழுதுபார்த்தல் தொடர்பாக'' பேணிச் செல்லப்படுகின்ற பதிவேட்டில் வீதி விளக்குகளின் பாதுகாப்பு மற்றும் பொறுப்புத் தன்மை தொடர்பாக அறிவித்து பொது மக்கள் பொறுப்பாளர்களுக்கு பொறுப்பு கையளிக்கப்படும்.	சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ) சபையினால் பராமரிக்கப்படுகின்ற 161 மயான நிலங்களுக்கிடையே 159 காணிகளின் உரித்து மற்றும் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் அமைந்துள்ள காணிகளை உள்ளடக்கிய சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 08 காணிகளின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	மயான நிலங்கள் சபைக்கு கையளிப்பதற்காக உரிய பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த மயான நிலங்களை கையேற்கும் நடவடிக்கைகள் மிகவும் சிக்கலான செயற்பாடு களாக இருந்தமையால் இது வரையிலும் அதனைக் கையளிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்கவில்லை.	காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
பெறுமதி ரூபா 5,519,850 ஆன பாதீடு செய்யப்படாத 04 வேலைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த துடன் ஆண்டின் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12,200,000 ஆன 11 வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கப்படவில்லை.	மதிப்பீடு பொருத்தமாக தயாரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.6 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபை அங்கீகரித்த பதவியணியில் 20 வெற்றிடங்களும், 48 மிகையும் காணப்பட்டதுடன் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஆரம்ப பயிலுநர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் 12 ஊழியர்களிடமிருந்து ரூபா 262,180 அறவிடப்படாத ஊழியர் கடன் மீதி காணப்பட்டது. இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் மரணமடைந்த, இடமாற்றலாகிச் சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களின் மிகுதிக் கடன் மீதியை எதிர்காலத்தில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் 06 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்ய்பபட்ட மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கிடையே 20 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான முரண்களும், 08 செலவின விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 11 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையிலான முரண்களும் காணப்பட்டது. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.	பாதீடு தயாரிக்கும் போது வருடாந்த பாதீட்டு செலவினங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட வருமான செலவின விடங்கள் தயாரிக்கப் படுகின்றமையால் ஆண்டில் கிடைக்கின்ற வருமானங்களின் பெறுமதியை அதிகரித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இருந்ததுடன் அதன் பிரகாரம் இவ்வாறான முரண்கள் ஏற்பட்டிருந்தது.	பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.